Y. M. C. A

# வீடுகள், சொத்துக்களை இழந்தவர்களுக்கு உதவுமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 271 ஞாயிறு 11-11-1990 (ஐப்பசி 25) ந. ஆகிர் 22

ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் எமது விடுதலைப் போராட்டத்தை பலவீனமடையச் செய்வதற்கு ஸ்ரீலங்காப் படைகள் தமிழ் மக்கள் மீது முன்னென்றுமில்லாதளவுக்கு தமது முழு அளவிலான தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன. இதனால் கடற்பகுதிகள், யுத்த முனைகள் என்பவற்றை அண்டி வாழும் மக்கள் தமது வீடுகள், நிலங்களை இழந்து அகதிகளாக இடம்பெயருகின்றனர். இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி விமானத் தாக்குதல் மூலமும் பலர் தமது வீடுகளை இழந்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் இருந்து அதிகமானோர் குடாநாட்டிற்குள் வந்துள்ளனர். ஆனால் இங்குள்ள சிலர் தமது வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி குடும்பமாகவே வெளிநாடு செல்கின்றனர் இவர்கள் —4 ஆம் பக்கம் பார்க்க

# காங்கேசன்துறைப் பகுதியையும் பாதுகாப்பு வலயமாக்க முயற்சி

## ராணுவ தாக்குதல் குறித்த அறிக்கை தயாரிக்க செஞ்சிலுவை செம்பிறைச்சங்க பிரதிநிதி விஜயம்

காங்கேசன்துறை துறைமுகத்தையும், சீமெந்துத் தொழிற்சாலையையும் உள்ளடக்கிய வலயத்தையும் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது குறித்து சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்க ஜெனிவா தலைமை அலுவலகம் ஆலோசித்து வருகின்றது.

சீமெந்து தொழிற்சாலை கடந்த நான்கு மாதங்களாக இயங்காததால் இங்கு தொழில்புரியும் பல ஊழியர்கள் வேலையை இழந்துள்ளதையும், பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்க முடியாத கால நிலையையும் கருத்திற் கொண்டு இந்தப் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜெனிவாவில் உள்ள சர்வதேசசெஞ்சிலுவை செம்பிறைச் சங்கத்தின் இலங்கைப் பிரதிநிதி நவோக்கிகொக்காவா நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் யாழ்ப்பாணப் பகுதியில் இடம் பெற்ற இராணுவத் தாக்குதல்கள் குறித்த விபர அறிக்கைகளைத் தயாரித்து ஜெனிவா தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைப்பார். (74,ப11)

### இரகசியப் பொலிஸ் விசாரணையின் போது

## 4-ம் மாடியில் இருந்து குதித்து சரவணபவானந்தன் மரணம்

கொழும்பில் இரகசியப் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சரவணபவானந்தன் என்பவர் இரகசியப் பொலிஸ் தலைமையலுவலகமான நாலாவது மாடியில் இருந்து குதித்து மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் 5-ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நாலா —04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பெரியாஸ்பத்திரியில் 300 நோயாளர் அனுமதி

நேற்று முன்தினம் முதல் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று நண்பகல்வரை முந்நூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று ஊழியர்களில் 80 வீதமானோர் கடமைக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் 24 மணிநேரமும் இங்கு சேவையாற்றி வருகின்றனர். இவர்களே 'பாஸ்' வழங்கும் பணியையும் மேற்கொள்கின்றனர். (74)

## 5 ஜே. வி. பி. சந்தேக நபர்கள் தப்பியோடிவிட்டனர்

இரத்தினபுரியில் உள்ள புனர்வாழ்வு முகாமிலிருந்த ஜே. வி. பி. சந்தேக நபர்களில்ஐவர் தப்பிஓடிவிட்டனர்.

சுமார் 25 ஜே. வி. பி சந்தேக நபர்களை பஸ் ஒன்றில் கொண்டுவரப்பட்டபோது அவிசாவளை நகருக்கு அருகில் பஸ் வந்துகொண்டிருந்த சமயம் இந்த ஐவரும் தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாகப் பொலிஸார் இப்பகுதியில் தேடுதல் நடத்தியும் இவர்களைப் பிடிக்க முடியவில்லை. (ப-11)

## குவைத்திலிருந்து திரும்பிய 1500 பேரின் பெயர் பதிவு

குவைத்திலிருந்து யாழ் குடாநாட்டிற்குள் திரும்பியவர்களில் 1500 பேர் இதுவரை தமது பெயர்களை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவு செய்துள்ளனர்.

போக்குவரத்து வசதியின்மையால் அதிகமானோர் உடனடியாகத் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்குச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமும், புனர்வாழ்வு அமைச்சின் மூலமும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. (ப11 74)

## மறுமலர்ச்சிக் கழகக் கூட்டம்

நாளை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மறுமலர்ச்சிக் கழகத்தின் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் சகல பல்கலைக்கழக மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்குக் கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (47)

**உள்ளே...**

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் அ. துரைராஜாவுடன் ஒரு சந்திப்பு

'முற்றுப் பெறாத யுத்தம்' விவரணத் தொடர் நாளைய முரசொலியில்

## போக்குவரத்து வசதியின்றி கர்ப்பிணி மரணம்

போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் வைத்தியசாலைக்குச் செல்லமுடியாது வீட்டில் குழந்தையைப் பெற்றெடுத்த தாய்மரணமானார்.

நேற்று அதிகாலை வேளை 8 பிள்ளைகளின் தாயான நிறைமாதக் கர்ப்பிணிக்கு வயிற்றுவலி ஏற்பட்டதும் கைதடியிலிருந்து வைத்தியசாலைக்குச் செல்லமுடியாத —04 ஆம் பக்கம் பார்க்க

## உப்பளம் இயங்கினாலே ஊழியருக்குச் சம்பளம்

ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் இயங்க வைத்து அங்கு இருக்கும் உப்பை கொழும்புக்கு அனுப்பினால் மட்டுமே, இங்கு கடமைபுரியும் ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படும் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது சம்பளப் பிரச்சினை குறித்துக் கொழும்பில் உள்ள உப்புக்கூட்டுத்தாபன முகாமையாளருடன் பேச்சு நடாத்திய போதே அவர் இவ்வாறு கூறினாராம். (ப 17)

## உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி மா, அரிசி மோசடியால் கைது

பல லட்சம் ரூபா பெறுமதியான அரிசி, மா என்பவற்றை மோசடி செய்த உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும், இரு களஞ்சியப் பொறுப்பாளர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் இரத்மலான உணவுக் களஞ்சியத்தில் இடம்பெற்றதாகவும், இருப்பு எடுக்கப்பட்டபோது இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## படகு மீது கடற்படைதாக்கு குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

நேற்று முன்தினம் புங்குடுதீவு கடற்பகுதியில் படகு ஒன்றின் மீது கடற்படையினர் தாக்குதல் நடாத்தியதில் படகில் வந்த சுப்பிரமணியம் தியாகராஜா (46) என்பவர் பலியானார்.

இவரது சடலம் நேற்றுக் காலை 7-45 மணியளவில் புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவிலருகில் கரையொதுங்கியது. இதே சமயம் இப்படகில் பயணம் செய்த சி. ரத்தினம் என்பவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார். படகில் வந்த ஏனையோர்கதி பற்றித் தெரியவில்லை.

## இராணுவ முகாம் அருகில் மின்மார்க்கத்தில் தடை

மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் 132 கே வி மின் மார்க்கத்தில் தடை ஏற்பட்டுள்ளதால் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான நீர் மின்சாரத்தை வழங்க முடியாதுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தடை மாங்குளம் இராணுவ முகாமிற்கு அருகில் ஏற்பட்டுள்ளதால், இராணுவத்தின் அனுமதியுடனேயே திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிருப்பதா —04 ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் நாள் கண்காட்சி

தமிழீழத்தின் சிறப்பான பொருளாதார மேம்பாடுகளை வெளிப்படுத்த தமிழீழ ஆய்வு நிறுவனமும் யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து ஒரு கண்காட்சியினை ஒழுங்கு செய் —04 ஆம் பக்கம் பார்க்க

இலக்கத்தகடு அற்ற வாகனங்களில் வந்த முஸ்லிம்களால்

# கிழக்கில் கைதான தமிழர்களில்

# 1551 பேரைக் 'காணவில்லை'

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து கடந்த ஐந்து மாத காலத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 1551 பேர் 'காணாமல்' போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த யூன் மாதம் 15-ம் திகதியில் இருந்து 278 தமிழர்கள் திருகோணமலையில் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் அறுவர் பெண்களாவர்.

இவர்களில் சிலர் இராணுவத்தினராலும், பெரும்பான்மையோர் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களில் திரியும் முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இதே காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து இராணுவத்தினராலும் முஸ்லிம் காடையர்களாலும் கைது செய்யப்பட்டோரில் 1115 தமிழர்கள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து கைது செய்யப்பட்டவர்களில் 158 பேர் இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஆனால் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்திலிருந்து 32 பேரே கைது செய்யப்பட்டதாகவும், அவர்களும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் அரசு அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் 3 முதல் 12 வரை

## க. பொ. த. (சா. த.) பரீட்சையை வடக்கில் நடாத்த அரசு ஆர்வமாம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 3-ம் திகதி முதல் 12-ம் திகதி வரை 2300 நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு அமைய இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கு 5 லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சையை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நடாத்த பரீட்சைத் திணைக்களம் தயாராக உள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இதன் பொருட்டு வடக்கு, கிழக்குப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் முடிவு திகதிக்குப் பின்னரும் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுவதாகபரீட்சைத்திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

### கட்டணம் உயர்வு

கேரதீவு- சங்குப்பிட்டி வள்ளச் சேவைக்கு ஒரு நபருக்கும், துவிச்சக்கர வண்டிக்கும் தற்போது 15 ரூபா அறவிடப்படுகிறது. (72)

குவைத்தில் 4 கோடிரூபா திருட்டு!

## தமிழ்ச் சகோதரிகள் விடுதலை; 2 சிங்கள யுவதிகள் மீது வழக்கு

இலங்கைப் பணிப்பெண்களால் குவைத்தில் நான்கு கோடி ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டதாகக் குற்றம்சாட்டி கொழும்பில் தொடரப்பட்ட வழக்கில் சந்தேக நபர்களான இரு தமிழ்ப் பெண்மணிகள் 75 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டனைச் சேர்ந்த செல்வி ஆர். எஸ். புவனேஸ்வரி, ஆர். எஸ். புஷ்பராணி ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். இவர்களிடமிருந்து கட்டுநாயக்காவிமான நிலையத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்ட மூன்று மோதிரங்களையும் திருப்பி ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏனைய இரு சந்தேக நபர்களான மாத்தளையைச் சேர்ந்த கே. ரோஹினி, இரத்தினபுரியைச்சேர்ந்த ஏ. நந்தலதா ஆகிய இரு பணிப்பெண்களும் தாம் குற்றவாளிகள் என ஒப்புக்கொண்டதையடுத்து அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு பெண்களும் குவைத்தில் ஒரே வீட்டில் பணிபுரிந்ததாகவும் அங்கிருந்த நான்கு கோடி ரூபா பெறுமதியான நகைகளே திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### மந்திகையில் திருட்டு

மந்திகைச் சந்தியிலுள்ள தேநீர்க்கடை ஒன்று இரவு உடைக்கப்பட்டு இனந் தெரியாதோரால் உணவுப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன

இதேதினம் மந்திகை வைத்தியசாலை முன்பாகவுள்ள தேநீர்க் கடை ஒன்றிலும் திருட எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. (50)

### தமிழின எழுச்சி விழா

வடமராட்சி முறைசாராக் கல்விப் பிரிவில் உள்ள முதலுதவி மையங்களால் தமிழின எழுச்சி விழா 15-ம் திகதி வியாழன் காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் மகளிர் பிரிவில் நடாத்தப்படவுள்ளன.

நடனம், நாடகம், வில்லுப் பாட்டு, கவியரங்கு போன்ற நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெறவுள்ளன. (74)

### துன்னாலையில் பன்றித் தொல்லை

துன்னாலை, கலிகை ஆகிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் உள்ள நெற்பயிர்கள் அப்பகுதிகளில் உள்ள பன்றிகளினாற் சேதமாக்கப்படுவதாகத் தெரிய வருகின்றது

இப்பன்றிகள் அப்பகுதிகளில் வளர்க்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இப்பன்றிகளை உரியவர்கள் வயல் நிலங்களுக்கு விடாமல் தடுத்து நிறுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி விவசாயிகள் சிற்றூர் அவைகளிடம் புகார் தெரிவித்துள்ளனர், (43)

## யாழ் இறைவரித் திணைக்களத்தை மூடிவிடக் கொழும்பில் ஆலோசனை

யாழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினை மூடக் கொழும்பில் தற்சமயம் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் முதற்கட்டமாக ஊழியர்கள் குறைக்கப்படலாமெனவும் சொல்லப்படுகின்றது.

யாழ் குடாநாட்டில் இத் திணைக்களத்திற்கு வரவேண்டிய வருமான வரியினைப் பலர் கட்டுவதில்லையென்றும், தற்சமயம் பல வர்த்தக ஸ்தாபனங்கள் அழிந்த நிலையில் இருப்பதால் அடுத்த வருடமும் வருமான வரியை எதிர்பார்ப்பது கஷ்டம் எனவும் கொழும்பில் கருதப்படுவதாலேயே இத்திணைக்களத்தையே மூட நடவடிக்கையெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் தற்சமயம் கொழும்பில் உள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-1)

## பாமஸிகளில் ஆங்கில மருந்தில்லை; சுதேச வைத்தியரிடம் மக்கள் தஞ்சம்

யாழ் பிரதேசத்தில் உள்ள பாமஸிகள் திறக்கப்பட்டிருந்தும் பல முக்கிய மருந்துகளை அங்கு பெற முடியாதுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து மருந்துவகைகளை இங்கு கொண்டுவர முடியாமையே இப்பற்றாக்குறைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஆயுர்வேத. சித்த வைத்தியர்களிடம் மருந்து பெறச் செல்வோரின் தொகை குடாநாட்டில் மீண்டும் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது (72)

## பூநகரி - மன்னார் வீதியில் 6500 ரூபா. பகலில் கொள்ளை

பூநகரி - மன்னார் வீதியில் 14ஆம் கட்டையில் டீசல் வியாபாரம் செய்து விட்டு வந்த இளைஞர் ஒருவரிடம் 6500ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காட்டுப்பாதையான இவ்விடத்தில் இவர் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது பற்றைக்குள் வாள்களுடன் மறைந்திருந்த இருவர் இவரை மறித்துத் தாக்கிப் பணத்தை எடுத்தனர்.

இந்த இளைஞர் மயங்கிய நிலையில் வீதியில் கிடந்து பின்னர் தூக்கிச்செல்லப்பட்டார்.

## கிளப்பன்பேர்க் அகதிமுகாமில் 60 தமிழர் இராணுவத்தால் கைது

திருமலைநகர் அருகே கிளப்பன்பேர்க் அகதி முகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்து 60 ஆண்களைக் கைது செய்து கொண்டுசென்றனர். இவர்கள் நிலைபற்றி இன்னமும் தெரியவரவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் இதே அகதிமுகாமில் இருந்து 23ஆண்களைஇராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் கைதுசெய்து உவர்மலையில் வைத்துப் படுகொலை செய்தமை தெரிந்ததே.

## வங்கியாளர் பரீட்சை இம்முறையாழ்மாவட்டத்தில்இல்லை

வங்கிகளிற் பணிபுரியும் ஊழியர்களிற்கு நடைபெறும் "வங்கியாளர் பரீட்சை" இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 17-ம், 18-ம், 24-ம் திகதிகளில் நடைபெறும் இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் யாழ் மாவட்டப் பரீட்சார்த்திகள் கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், கண்டி ஆகிய இடங்களிலுள்ள பரீட்சை நிலையங்களுக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மே, நவம்பர் மாதங்களில் நடைபெறும் இப்பரீட்சைகள் சென்ற மே மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (70, 74)

## இடம் பெயர்ந்தோர்க்கான 4-ம் கட்டம், தொழில் பாதிப்புற்றோர்க்கான 3-ம் கட்டம், 1500ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோர்க்கான 3-ம் கட்ட உலர் உணவு விநியோகம்

| குடும்ப அங்கத்தவர் | 1அங்கத்தவர் | | 2அங்கத்தவர் | | 3அங்கத்தவர் | | 4அங்கத்தவர் | | 5ம் அதற்கு மேலும் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கி. | ரூ. ச. | கி. | ரூ. ச. | கி. | ரூ. ச. | கி. | ரூ. ச. | கி. | ரூ. ச. |
| அரிசி | 2 | 26.00 | 4 | 52.00 | 5 | 65.00 | 6 | 78.00 | 8 | 104.00 |
| மா | 1 | 14.25 | 2 | 28.50 | 2½ | 35.75 | 3 | 42.75 | 3 | 42.75 |
| சீனி | ½ | 15.00 | 1 | 30.00 | 1 | 30.00 | 1½ | 45.75 | 2 | 60.00 |
| பருப்பு | ¼ | 10.00 | ½ | 20.00 | ½ | 20.00 | ¾ | 30.00 | 1 | 40.00 |
| விட்டாஸ்பிறே | | — | | — | 1 | 36.40 | 1 | 36.40 | 1 | 36.40 |
| மண்ணெண்ணெய் | ¼ லீற் | 2.00 | ¼ லீற் | 2.00 | ¼ லீற் | 2.00 | ¼ லீற் | 2.00 | ¼ லீற் | 2.00 |
| மீதிப்பெறுமதி சில்லறைப் பொருட்கள் அல்லது சீனி/விட்டாஸ்மில்க் | | 16.75 | | 21.50 | | 20.85 | | 17.85 | | 29.85 |
| | | 84.00 | | 154.00 | | 210 00 | | 252.00 | | 315.00 |


### சிறு விளம்பரம்

சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். "ஸ்கைலைன்ஸ்" 281B, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். "Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11028

புத்தகம்

தமிழ்ப் பாலர்களின் கல்விக்களஞ்சியம்! நால் வர்ணப் பதிப்பு அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் (சீர்திருத்த எழுத்துக்களுடன்) விலைரூபா 12/-. ஆட்பேப்பரில் ரூபா15/-. மொத்தமாகவும் பெறலாம் மண்டேலா ரேடர், பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. 11050

# சிறிய செய்திகள்

## சரத்தின் மகன் சுருக்கிட்டுத் தற்கொலை

தமிழர் நலன்களில் அதிக அக்கறை காட்டியவரும் முன்னாள் கலவான த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான அமரர் சரத்முத்தெட்டுவேகமவின் மகன் ஹர்சா மைத்திரி முத்தெட்டும்வகம (20) தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கல்லூரி ராக்கிங் தொடர்பாக ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாகவே இவர் தற்கொலை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஹர்சாவின் தாய் மனோரி முததெட டுவேகம மறைந்த அரசியல்வாதி டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவின், புதல்வியாவார்.

1986-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி ஹர்சாவின் தந்தை சரத் இரத்தினபுரியில் நடந்த வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## படப்பிடிப்பாளர் பலாலியில் படுகாயம்

பலாலி இராணுவ முகாமைச் சுற்றி தற்போது நடைபெற்றுவரும் 'ஜயசக்தி' இராணுவ நடவடிக்கைகளைப் படம் பிடிக்க முயன்ற அரச தகவல் திணைக்களத்தின் சிங்களப்படப்பிடிப்பாளர் ஒருவர் புலிகளின் தாக்குதலினால் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்சி உமாசிலிய என்ற இந்தப் படப்பிடிப்பாளர் கொழும்பிலிருந்து இராணுவத்தினரால் பலாலிக்கு விமானத்தில் அழைத்து வரப்பட்டிருந்தார்.

தற்போது இவர் கொழும்பிலுள்ள வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கைதடியில் மகப்பேற்று விடுதி திறப்பு விழா

கைதடி ஆயுர்வேதப் போதனாவைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி 14-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.45 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது

அன்று முதல் இவ்வைத்திய சாலையில் கர்ப்பிணி நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் (திருமதி) மதவத்துரை, சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ் பவானி ஆகியோர் அறிவித்துள்ளனர்.

## பாடசாலைகள் இயங்குகின்றன

வடமராட்சி கிழக்கில் பெரும்பாலான பாடசாலைகள் இயங்குகின்றன. ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் வரவு திருப்திகரமாகவுள்ளது

ஒரு சில பாடசாலைகளில் அகதிகள் இருப்பதால் பாடசாலை நடாத்தமுடியாமல் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சில பாடசாலைகளில் ஒரு பகுதியில் அகதிகள் தங்கியுள்ளனர், மறுபகுதியில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அகதிகளை வேறு இடங்களுக்கு மாற்றிப் பாடசாலைகளை முழுமையாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளில் சிற்றூரவைகளும், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் ஈடுபட்டுள்ளன. (43)

## புதிய விழிப்புக் குழு

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி இப்பகுதிகளில் உள்ள கடைகளைப் பாதுகாக்க விழிப்புக் குழு ஒன்று அமைப்பது எனச் சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 12 பேர் வீதம் ஒவ்வொரு இரவும் 9,00 மணியிலிருந்து காலை 5.00 மணி வரையும் கடமையில் ஈடுபடுவார்கள் எனவும் இதற்கு சகல வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கும்படியும் வர்த்தகர் சங்கம்கேட்டுள்ளது.

10ஆம் திகதியிலிருந்து இம்முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சாவகச்சேரிச் சந்தையில் அண்மையில் பொம்மர்த் தாக்குதல் நிகழ்ந்த அன்று இரவு இப்பகுதியில் உள்ள சில கடைகளில் பொருட்கள் களவாடப்பட்டதனை அடுத்தே இந்நடவடிக்கைமேற்கொள்ளபபட்டுள்ளது. ப-32

## கைதடி ஏரியில் சடலம் மீட்பு

நேற்றுக் காலை 7 மணியளவில் கைதடிக் கடல் ஏரியில் மிதந்த நிலையில் ஒருவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது

நேற்று முன்தினம் நெல் வயலைப் பார்த்து வருவதாகக் கூறிவிட்டுச் சென்ற கைதடியைச் சேர்ந்த இளையதம்பி பெரியாம்பி(53) என்பவரே மேற்படி கடலேரியில் குளித்துக் கொண்டிருக்கும் போது மூழ்கி மரணமானதாகவும் கூறப்படுகிறது.

இவருக்கு ஏற்கனவே வலிப்பு ஏற்படுவது வழக்கம் என்றும் தெரியவருகிறது.

(71, ப-5)

## வென்னப்புவையில் படகு கவிழ்ந்து பலர் பலி!

புத்தளம் மாவட்டம் வென்னப்புவையில் நேற்று முன்தினம் பிரயாணிகள் படகு ஒன்று ஆற்றில் மூழ்கியதில் 30 பேர் மரணமானதாக அறிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்களில் 15 பேரின் சடலங்கள் நேற்று நண்பகல் வரை மீட்கப்பட்டன.

## பஸ் ஊழியருக்கு 3 மாதவேதனம் இதுவரை இல்லை

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதகால வேதனம் இதுவரை வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட், செப்ரெம்பர், அக்டோபர் மாதங்களுக்குரிய வேதனம் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் ஊழியர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

இதனால் பல்வேறு தரங்களையும் சேர்ந்த 1500 ஊழியர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய திணைக்கள, கூட்டுத்தாபன, சபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 1989-ம் வருடத்திற்கான கஷ்ட நிவாரணப் படியும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஏனைய திணைக்கள, சபைகளின் மேலதிகாரிகள் தமது ஊழியர்களுக்குரிய வேதனத்தை கொழும்பிலிருந்து பெற்று வழங்குவதற்கு அதிக ஆர்வம் காட்டிவருவதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

துணைவேந்தர் அ. துரைராஜாவுடன் ஒரு சந்திப்பு:

# "கல்வியைப் புறக்கணித்தால் பின்தங்கிவிடுவோம்!"

## '56 வயதில் தினமும் 36 மைல் சைக்கிள் ஓடுகிறேன் !"



ஒரு வாரத்துக்கு மேலாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழைக்குப் பிறகு சூரியன் தலையை நீட்டிப்பார்க்கும் ஓர் உன்னதமான காலைப்பொழுது. கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பரமேஸ்வரன் கோயில். கழுவித்துடைத்து விட்டது போன்ற வீதி. ஓங்கி வளர்ந்த அசோக மரங்களின் வரிசை. மைதானத்தைப் பச்சைக் கம்பளம் போர்க்கும் பசும் புல்; இதமான இளங்காற்று. — இவை தந்த புத்துணர்ச்சியோடு படியேறி நுழைகிறோம், குறித்த நேரத்துக்கு ஐந்துநிமிஷம் பிந்திய குற்ற உணர்வுடன்.

இன் முகத்தோடு — இசைவான புன்னகையோடு — வரவேற்கிறார் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா. நீண்ட இடைவெளிக்குப் பின் யாழ் பல்கலைக்கழகம் மீளத் திறக்கப்பட்ட நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்கிறது.

போர் ஏற்படுத்தியுள்ள அழிவு, பீதி, பொருளாதார நெருக்கடி, நிச்சயமின்மை எல்லாம் எம் அன்றாட வாழ்வையே சீர்குலைத்துவிட்ட நிலையில், துணிந்து பல்கலைக் கழகத்தைத் திறந்திருக்கிறாரே துணைவேந்தர் என்ற வியப்பு மேலிடுகிறது ; வினாவைத் தொடுக்கிறோம்:

கே: நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில், மாணவர் தமது கல்வியைத் தொடரக் கூடிய சூழல் நிலவுகிறது என்று கருதுகிறீர்களா?

ப: பௌதிக சூழ்நிலையைக் குறிப்பிடுகிறீர்கள் என நினைக்கிறேன். மின்சாரம், எரிபொருள், உணவு, மருந்து—ஏதும் இல்லாத நிலையில் சூழ்நிலையைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

போர் தொடருமாயின், நாமும் கல்வியைத் தொடர வேண்டியதுதான் குண்டு வீச்சு இல்லையெனில், ஓரளவு உணவு கிடைக்குமெனில், நியாயமான போக்குவரத்து வசதியை ஏற்படுத்த முடியுமெனில், பல்கலைக்கழகம் தொடர்ந்து நடக்கலாம்.

கே: போக்குவரத்து வசதி போதாதே?

ப: 56 வயதில் 18 மைல் சைக்கிள் ஓடி வந்திருக்கிறேன். மாலை வீடு திரும்புவேன் இது போதாதா?

கே: எரிபொருளை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

ப: ஜெனறேற்றர்களுக்கு நாளுக்கு 150 லீற்றர் டீசல் தேவை. செய்முறை ஆய்வுகளுக்கான வாயு உற்பத்திசெய்ய 15 லீற்றர் சுபப பெற்றோல் தேவை இவற்றை வழங்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரிதா றத்வத்தையைக் கேட்டிருக்கிறேன்.

கே: மாற்று வழிகளில் மின்சாரம் பெறும் வாய்ப்பு உண்டா?

ப: காற்றாடி, உயிரியல் வாயு, சூரியசக்தி என்றெல்லாம் உண்டு ஆனால் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட மின் சக்தியையே அவற்றிலிருந்து பெறமுடியும். நாம் முழுக்க முழுக்க அவற்றில் தங்கியிருக்க முடியாது. அபிவிருத்தி வேலைகளுக்கு fossil fuel power அல்லது நீர் மின்வலு கட்டாயம் தேவை

கே: தமிழினத்தின் முன்னேற்றத்தில் கல்வி வகிக்கும் பங்கு என்ன?

ப: எமது வளங்கள் இருவகை: இயற்கை வளங்கள், மனித வளங்கள. இயற்கை வளங்கள் மட்டுப்பட்டவை நாம் கல்விமூலம் மனித வளங்களை வளர்க்க வேண்டும். அதுவே முன்னேறும்வழி.

கே: இன்றைய போர்ச் சூழலிலும் ?

ப: நிச்சயமாக! பிறநாடுகளில் போர் நடந்த காலங்களிலும் கல்வி கைவிடப்படவில்லை சீனாவில் போர்வீரர்கள் பங்கர்களிலும் படித்தார்கள். தொலைக்கல்வி மிக்க பயன்தரும்.

கே: ஐயா, விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு ஒரு மனக்குறை இருப்பது தெரிகிறது. பொதுநலத்துக்காக அவர்கள் அனைத்தையும் தியாகம் செய்ய, ஏனையோர் தமது சொந்த நலனே குறியாக இருக்கிறார்கள் என்பதே அது—

ப: கல்வியைத் துறந்து அரசியலில்—போராட்டத்தில்—ஈடுபடுவது முன்பும் நடந்திருக்கிறது. எனக்கு ஞாபகமிருக்கிறது: 1983 கலவரத்தையடுத்து, பேராதனையில் என்னிடம் பொறியியல் படித்துக்கொண்டிருந்த மாணவர்களில் 150 பேர் இயக்கங்களில் சேர்ந்தார்கள்...

கே: சரி, அப்படிச்சேர்வோர் கல்விவாய்ப்பை இழக்கிறார்களே?

ப: நிரந்தரமாக இழக்கவேண்டியதில்லை. இரண்டாம் உலகப்போரில் குதித்த கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்கள், போர் முடிய மீண்டும் கல்வியைத் தொடர்ந்தார்கள்... போராளிகளும் கல்வி பெற சில ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தொலைக்கல்வி இதற்கு உதவலாம்.

கே: ஆனால் எங்கள் கல்விமுறை வெறுமனே அலுவலகங்களில் பணிபுரிவோரை உற்பத்தி செய்கிறதென்ற குறைபற்றி—

ப: அந்நிலைமை மாறிவருகிறது எமது சமுதாயம் போட்டிமுறையில் அமைந்தது ஏனைய நாடுகள் வேகமாக முன்னேறும் பொழுது, கல்வியைப் புறக்கணித்தால், நாம் பின்தங்கிவிடுவோம் ..எமக்குப் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் தேவை

கே: ஆனால் எமது மருத்துவர்களும் பொறியியலாளர்களும் எமக்குச் சேவை செய்வதற்குப் பதில் வெளிநாட்டவர்களுக்குச் சேவை செய்ய ஓடுகிறார்களே!

ப: அதைத்தான் சொல்ல வந்தேன். எங்கள் கல்வி முறையில் ஏதோ ஒருகுறை இருக்கிறது. மாணவர் உள்ளத்தில நாட்டுப்பற்றை-தொண்டுள்ளத்தை - ஊட்ட அது தவறிவிட்டது கற்றவர்கள் மக்களுக்கு சேவை செய்கிறார்களில்லை... அமெரிக்கா போன்ற நாடுகளில் தொண்டு நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்றத் தனிப்பட்டவர்கள் ஆர்வத்தோடு முன்வருகிறார்கள் ... இங்கே நபது பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பணியாற்ற டொக்ரர்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன். இங்கே படித்துப் பட்டம் பெற்றவர்கள் கூட வெளிநாடுகளுக்கு ஓடி விடுகிறார்கள். நமது மண்ணுக்கு - மக்களுக்கு சேவை செய்வதாய் இல்லை!

கே: இங்கே, தமக்கு, உரிய கணிப்புக் கிடைபபதில்லை என்று சொல்கிறார்கள்... எனக்குத் தெரியும், ஒரு வைத்திய நிபுணர், தம்மைப் படைவீரன் ஒருவன் அவமதித்த மறுநாளே வெளிநாடு போய்விட்டார்

ப; இதையெல்லாம் personal ஆக எடுக்க வேண்டியதில்லை. முழு இனமும் அவமதிக்கப்படுகிறது என்பதுதான் உண்மை. அந்நிலையில் நாமும் - நம பங்குக்கு - சில இகழ்ச்சிகளைச் சகித்துக் கொள்கிறோம்.

கே: நாட்டுப்பற்றை வளர்க்க என்ன செய்யலாம்?

ப: திடீரென்று பல்கலைக்கழகத்தில் வைத்து புகட்டப்படுவது அல்ல அது. அடிப்படையிலிருந்து - பாடசாலைப் பருவத்திலிருந்து அது சுவற வேண்டும்.

### சந்தித்தவர்: சோ. ப

யாழ் பல்கலைக்கழகத்தின் தற்போதைய செயற்பாடுகள் பற்றி எதிர்காலத் திட்டங்கள் பற்றி உரையாடுகிறோம். புதிய மாணவர்கள் 'றாக்' செய்யப்படுகிறார்களா என்று கேட்டதற்குத் துணைவேந்தர் சொன்னார் —

''பாரதூரமான பல பிரச்சினைகளை நாம் எதி நோக்கும் இந்நாளில், யாரும் 'றாங்கிங் இல் ஈடுபடுவார்கள் என்று நான் கருதவில்லை. மாணவர் மன்றங்களும் இது சம்பந்தமாக அறிக்கை விட்டிருக்கின்றன; கிடைக்கும் ஒத்துழைப்பு உற்சாகமளிக்கிறது''

யாழ் பல்கலைக் கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கேட்டதற்குத் துணைவேந்தர் சொன்னார்:

விவசாய பீடத்தின் ஆரம்பவேலைகளில் சில தடங்கல்கள் ஏற்பட்டன. நாம் சோர்ந்து போய்விடவில்லை. தற்காலிகமாக, இரணைமடு விவசாய விஸ்தரிப்பு மையத்தில் டிஸெம்பர் 3ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகும்.

பொறியியல் பீடத்தைத் திட்டமிட்டு அமைக்க ஒரு வருடமாகும். பேராசிரியர் நவரத்தினராஜா பொறுப்பேற்கிறார்

நுண்கலைத்துறைக்கென ஒரு கட்டிடம் முதலாம் கட்டத்தில் இருக்கிறது நுண்கலைப் பகுதியை இன்ஸ்ரிரியூற் ஆக உயர்த்தப்போகிறோம் அதற்குப்போதிய வளங்கள உண்டு. கார்த்திகேசு என்ற பெரியார், சிங்கப்பூரில், அதற்கென சொத்துக்களைத் தந்துள்ளார்.

பதிவாளர் பரமேஸ்வரனும் உதவிப்பதிவாளர் முருகையனும் எட்டிப்பார்க்கின்றனர். ஒரு மணிநேரம் உருண்டோடி விட்டதை உணர்கிறோம்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## உலக அரங்கில்

### புதிய பிரதமராக சந்திரசேகர் துணைப் பிரதமர் தேவிலால்



திரு. சந்திரசேகர் நேற்றுப் புதிய பிரதம மந்திரியாக ராஷ்டிரபதிபவனில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். துணைப்பிரதமராக தேவிலால் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். நேற்றைய சத்தியப்பிரமாண வைபவத்தில் அமைச்சர்களின் சத்தியப்பிரமாணம் ஏதும் நடைபெறவில்லை. நேற்று நடைபெற்ற இவ்வைபவத்தில் முன்னாள் பிரதமர் வி. பி. சிங், இந்திரா காங்கிரஸ தலைவர் ராஜீவ் காந்தி, திருமதி சந்திரசேகர், ஜனதாதளத் தலைவர் எஸ். ஆர். பொம்மை, முன்னாள் சூழலியல் அமைச்சர் மேனிகாகாந்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வைபவத்தைத் தொடர்ந்து பிரதமர் சந்திரசேகர் வி. பி. சிங்குடன் சில நிமிடநேரம் உரையாடினார்

புதிய அரசியல் நிலைகுறித்துத் கருத்து வெளியிட்ட ராஜீவ்காந்தி புதிய அரசு நான்கு ஆண்டுக்குப் பதவியில் இருக்கும் எனத்தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார். இதே வேளை தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி பிரதமருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். நேற்று முன்னாள் அமைச்சர்களின் பிரிவுபசார வைபவமும் நடைபெற்றது. இதனிடையே முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தாம் உழைக்கப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### தென்னாபிரிக்கக் கறுப்பினத்தவரிடையே மோதல்

தென்னாபிரிக்கக் கறுப்பினத்தவரிடையே நடைபெற்று வரும் இனக்கலவரத்தின் தொடராக நேற்று ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் ஆதரவாளர்கள் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒன்பது பேர் காயமடைந்தனர். இவர்கள் மூன்று பஸ்களில் பயணம் செய்துகொண்டிருந்தபோது ஜோகனஸ்பேர்க்கில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் வைத்து கறுப்பின சூளு இனத்தவரின் தாக்குதலுக்குள்ளானர். சரிமாரியான துப்பாக்கித் தாக்குதலினால் நால்வர் ஸ்தலத்திலேயே பலியாகினர். இப் படுகொலை குறித்துச் சகோதர யுத்தத்தைக் கைவிடுமாறு ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கேட்டுள்ளார்.

### பாகிஸ்தான் அமைச்சரவையில் ஸியாவின் புதல்வர்

பாகிஸ்தானின் புதிய அமைச்சரவை நேற்று அமைக்கப்பட்டது. பதினெட்டு அமைச்சர்களைக் கொண்ட இந்த அமைச்சரவையில் முன்னாள் அமைச்சர்கள் மூவர் மீண்டும் அதே இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் யாகூப்கான் முக்கியமானவர். அமைச்சரவையில் முன்னாள் ஜனாதிபதி ஸியாவுல் ஹுக்கின் மூத்த மகன் தொழிலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் நவாஸ் ஸெரீப், ஸியாவுல் ஹுக்கின் தீவிர ஆதரவாளர் என்பதும் அவரது வாரிசு எனப் பலராலும் அழைக்கப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### போர் முரசு கொட்டும் அமெரிக்கர்

அமெரிக்கர்களில் பெரும்பாலானவர்கள் அமெரிக்க ராணுவம் ஈராக் மீது போர் தொடுக்க வேண்டும் என விரும்புகின்றனர். அண்மையில் ஏ. பி, சி செய்தி ஸ்தாபனம் அமெரிக்க மக்களிடையே நடாத்திய கருத்துக்கணிப்பின் போதே இம் முடிவு தெரியவந்துள்ளது. பத்துப்பேர்களில் ஏழுபேர் ஜனாதிபதி புஷ் உடனடியாக ராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிடவேண்டும் என விரும்புகின்றனர். மற்றுமோர் கணக்கெடுப்பின்படி 51 வீதமானவர்கள் ஈராக் மீதான ஐ. நாவின் பொருளாதாரத்தடை தோல்வி கண்டால் அமெரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் 56 வீதமானவர்கள் அமெரிக்கப் பிரஜைகள் ஈராக்கினால் துன்புறுத்தப்பட்டால் ராணுவ நடவடிக்கை வேண்டும் எனவும் விருப்பம் தெரிவிக்கின்றனர்.

### கடத்தப்பட்ட விமானம் கல்கத்தாவில்

தாய்லாந்துக்குச் சென்று கொண்டிருந்த விமானம் ஒன்று இடைவானில் கடத்தப்பட்டு நேற்றுமாலை கல்கத்தாவில் தரையிறங்கியுள்ளது. பர்மா தலைநகர் ரங்கூனில் இருந்து பாங்கொக் சென்றுகொண்டிருந்த மேற்படி பயணிகள் விமானத்தைப் பர்மிய பிரஜைகள் நால்வர் கடத்தியதாக அடையாளம் காணப்பட்டது.என்ன நோக்கத்திற்காக இவர்கள் விமானத்தைக் கடத்தினர் எனவும், விமானத்தில் எத்தனை பயணிகள் உள்ளனர் எனவும் இதுவரை தெரியவில்லை. மேற்படி பர்மிய கடத்தல்காரர்களுடன் இந்திய அதிகாரிகளும் பர்மிய அதிகாரிகளும் தற்போது பேச்சு நடாத்தி வருகின்றனர். கல்கத்தா விமானநிலையத்தில் இந்திய ராணுவத்தினரும் அதிரடிப்படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி 33 பயணிகள் நேற்று இரவு பத்து மணியளவில் கடத்தல்காரர்களினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடத்தலில் ஈடுபட்டவர்கள் பர்மிய மாணவ இயக்கத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 11-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது'

# யாழ் மாவட்டப் பகுதிகளில் திருடர்கள் தொல்லை அதிகரிப்பு

யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது. விலையுயர்ந்த சேலைகள், கட்டிடப்பொருட்கள், விறகுகள், மரப்பலகைகள், சைக்கிள், மற்றும் ஆடு, மாடு, கோழி போன்றனவும் இவ்வாறு திருடப்படுகின்றன.

நேற்று இரவு 7 மணியளவில் கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோவில் அருகேயுள்ள வீட்டுவளவினுள் சைக்கிளை வெளியே விட்டு புகுந்த இருவர் கட்டிடப் பொருட்களைதூக்கிவெளியே கொண்டுசென்ற போது அயலில் உள்ளவர்கள் பிடிக்க முற்பட்ட போது சைக்கிளை விட்டுவிட்டு திருடர்கள் தப்பித்துக்கொண்டனர்.

கல்வியங்காட்டில் டச்சு வீதியில் உள்ள வீடொன்றில் உலரப்போடப்பட்ட சேலைகள், உடுதுணிகள் போன்றன இரவு வேளை திருடப்பட்டுள்ளன. (71)

## முல்லைத்தீவில் விசர்நாய்க்கடி 18 பேரின் நிலை கவலைக்கிடம்

முல்லைத்தீவுப் பகுதிகளில் உள்ள குமுழமுனை, புதுக்குடியிருப்பு,உடையார்கட்டு, விஸ்வமடு ஆகிய பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கத்தின் வைத்தியக் குழு இங்குள்ள சுகாதார மையங்களில் பெரும் சிரமத்தின் மத்தியில் சேவையாற்றி வருகின்றது.

இதேவேளை இங்குள்ள வைத்திய மையங்களில் ஏ.ஆர்.வி விசர்நாய்கடிமருந்து இல்லாததனால்கடந்த வாரத்தில் மட்டும் 4 பேர் இறந்துள்ளனர். மேலும் 18 பேரின் நிலைமைகவலைக்கிடமாகவுள்ளது எனவும்டாக்டர் லம்போதரன் தெரிவித்தார்.

மேலும் தற்போது மழை காலம் என்பதனால் பாம்புக் கடிக்கு இலக்காகி அநேகமானோர் உள்ளனர் எனவும் இவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதற்குப் போக்குவரத்துச் சீரின்மையால் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

## பாதிக்கப்பட்ட யுவதிகளுக்கு தையற் பயிற்சி அளிக்கப்படும்

இராணுவ நடவடிக்கைகளால் தொழிலற்றிருக்கும் இளம் யுவதிகளின் குடும்ப வருமானத்தை ஏற்படுத்த இவர்களுக்கு தையற் பயிற்சி அளிக்க மனித முன்னேற்ற நடு நிலையம் நான்கு தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தில் வைத்து இப்பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அச்சுவேலி பங்குத்தந்தை வண. பிதா. எவ். எக்ஸ். பீ. றெக்னோ அடிகள் செய்து வருகிறார். (32)

### அமரர் கிருஷ்ணானந்தன் நினைவுப் பேருரை

பொருளியலாளர் அமரர் கிருஷ்ணானந்தன் நினைவாக நினைவுப் பேருரையும்,புத்தக வெளியீட்டு விழாவும் நடைபெற உள்ளன. நாளை பிற்பகல் 2. 30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் பேராசிரியர். வி. நித்தியானந்தன் ''யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியில் தனியார் கல்வி நிறுவனங்கள்'' என்ற தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்த உள்ளார்.

### கல்வியைப்...

விடைபெற்று வெளியே வருகையில், துணைவேந்தர் மனம்விட்டு, பலவிஷயங்கள் பற்றியும் பேசியதை உணர்கிறோம். ஒரு விஞ்ஞானிக்கேயுரிய, யதார்த்தமான நோக்கு அவரை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

கனேடிய, பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் அதிதிப் பேராசிரியராகவும், பேராதனையிலும் திறந்தபல்கலைக் கழகத்திலும் பொறியியல் பீடத்தலைவராகவும் கடமையாற்றி தற்போது யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தராக விளங்கும் இப்பெருமகனின் எளிமையான- சமூகமான - போக்குநம்மை ஆட்கொண்டுவிடுகிறது.

### 4 - ம் மாடியில்...

வது மாடியில் வைத்து கேள்விகள் கேட்கப்பட்ட போது நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தீவிரவாத இயக்கம் ஒன்றுக்கு வாகனங்கள் வாங்குவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

### போக்குவரத்து...

நிலையில் அவர் வீட்டிலேயே குழந்தையைப் பிரசவித்து சிறிது நேரத்தில் மரணமானார்.

கடந்தமாதம் கர்ப்பிணித் தாய் ஒருவர் கைதடியில் மருத்துவ வசதி கிடைக்கத் தாமதமாகியதால் மரணமானது குறிப்பிடத்தக்கது. (71)

### வீடுகள்...

வெளிநாடு செல்லும் போது உறவுமுறையான வயோதிபர்களை வீடுகளில் குடியமர்த்தி விட்டுச் செல்கின்றனர். இப்படிப்பட்ட வீடுகளை நாம் பொறுப்பேற்று, வீடுகள், சொத்துக்களை இழந்து தவிப்பவர்களை தற்காலிகமாகக் குடியமர்த்தி வருகிறோம். எனவே வெளிநாடு செல்பவர்கள் தமது வீடுகளையும், நிலங்களையும் எம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாவீரர்—

துள்ளன.

வடமராட்சிப் பகுதி, தென்மராட்சிப்பகுதி, வலிகாமம் பகுதி, தீவகம் பகுதியில் கண்காட்சி இடம்பெறும். உள்ளூர் பொருளாதாரத்தின் சிறப்புக்களைச் சகல துறைகளின் ஊடாகவும் வெளிப்படுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியில் தமிழீழப்பொருளாதாரத்தின் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் உள்ள தமிழீழதேசாபிமானிகளை, நிறுவனங்களை இணைந்துப்பணியாற்றும் படி தமிழீழ ஆய்வு நிறுவனம், யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகமும் கேட்டுக்கொள்கின்றன.

கண்காட்சியில் பங்கு கொண்டு காட்சியறைகளை அமைக்க விரும்புவோர் 18- ம் திகதிக்கு முன்னர் தமிழீழ ஆய்வுநிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## பாடசாலைக்கு வராதோர் விபரம் சேகரிப்பு

செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதிக்குப் பின்னர் பாடசாலைகளுக்கு சமுகமளிக்காத ஆசிரியர்கள், ஊழியர்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அதேவேளை மாவட்டச் சேவைத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் தாம் நடாத்தவுள்ள கொத்தணி அதிபர்கள் கூட்டத்தில் இந்த விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (37)

### இராணுவ...

கவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அனுராதபுரத்தில் 33 கே.வி.மின்மார்க்கத்தில் தடை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் வவுனியாவிற்கும் மின்சாரம் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (70, 74)


## காலமானார்

### திருமதி பொன்னம்மா பொன்னையா

திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா பொன்னையா காலமானார். அன்னார் விநாசித்தம்பி பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, தங்கேஸ்வரி, சத்தியபாமா, புகழானந்தம், புஸ்பராணி (ஆசிரியை காசிப்பிள்ளை வித்தியாலயம், கல்வியங்காடு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற சுகாதார சேவை உத்தியோகஸ்தர்) திரு செ. துரைசாமி, திரு. செ. இராசசிங்கம்(கிளாக் துறைமுகம் கொழும்பு) திருமதி பத்மினி, காலஞ்சென்ற ஆசிரியர் கு. பஞ்சரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூத உடல் இன்று ஞாயிறு மாலை 1.00 மணியளவில் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கேணியடி, திருநெல்வேலி. தகவல்: பொ. புகழானந்தம்

11061